**செய்தி வெளியீடு எண்: 147** **நாள் : 21.02.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

வேளாண்மையில் இருமடங்கு உற்பத்தி விவசாயிகளுக்கு மும்மடங்கு வருமானம் என்னும் கொள்கையினை அடிப்படையாகக்கொண்டு, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு, பல்வேறு கொள்கைகளை வகுத்து மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், சிறு குறு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து **“பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி”** திட்டம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் உத்திர பிரதேச மாநிலத்திலுள்ள கோரக்பூரில் 24.02.2019 அன்று துவக்கப்பட உள்ளது. அதே சமயத்தில், தமிழ்நாட்டில் சென்னை கலைவாணர் அரங்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய இரயில்வே மற்றும் நிலக்கரித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாநில அளவிலும், அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் அனைத்து வட்டாரங்களிலும் இத்திட்டம் துவக்கிவைக்கப்பட உள்ளது.

விவசாயிகள், பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களை குறித்த நேரத்தில் கொள்முதல் செய்து, அதிக விளைச்சல் பெற்று, பண்ணை வருவாயை உயர்த்த உதவியாக ஒரு தவணைக்கு 2,000/– ரூபாய் வீதம் மூன்று தவணைகளாக, நான்கு மாதங்களுக்கு ஒருமுறை 5 ஏக்கர் (2 எக்டேர்) வரையிலான சாகுபடி நிலங்களை உடைய தகுதி வாய்ந்த விவசாய குடும்பங்களுக்கு மொத்தம் 6,000/– ரூபாய் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளது. முதல் தவணைத் தொகையாக தகுதியுள்ள ஒவ்வொரு சிறு, குறு விவசாய குடும்பத்திற்கும் ரூ.2,000/– வீதம் இவ்விழாவில் வழங்கப்பட உள்ளது.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் **“பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி”** திட்ட விளக்க சிறப்புக்கூட்டம் நடைபெற உள்ளது. இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு தலைமைச்செயலர், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், வேளாண்மை இயக்குநர், தோட்டக்கலைத்துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர். விழாவில் கலந்து கொள்ளும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் வேளாண் சார்ந்த தொழில்நுட்ப கண்காட்சி அமைக்கப்பட உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**